# நிமித்த காரணம்! உபாதான காரணம்!

## (மண்ணும் – பானையும்)



ப்ரக்ஞன்

# நிமித்த காரணம்
# உபாதான காரணம்

(மண்ணும் – பானையும்)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# நூல் விளக்கம்



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மண்ணும் – பானையும் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2019 |
| பக்கங்கள் | : | 16 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# நிமித்த காரணம்
# உபாதான காரணம்

## (மண்ணும் – பானையும்)

நிமித்த காரணம், உபாதான காரணம் என்று இரண்டு விஷயங்கள் வேதாந்தத்தில் உண்டு. அதாவது, ஒரு மண் பானை இருப்பின், அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும். அந்த மண்தான் பானைக்கு **உபாதான காரணம்.**

ஆனால், மண் எப்படிப் பானையாக மாறும்?

தானாகவே அவைகள் ஒன்று சேர்ந்து பானையாகுமா?

முடியாதல்லவா!

ஆகவே, ஒரு குயவன்தான் அந்த மண்ணைப் பானையாகச் செய்ய வேண்டியிருக்கிறது.

மண்ணினால் பானை உண்டாக வேண்டுமானால், அதற்குக் குயவன் என்ற ஒரு காரணமும் வேண்டியிருக்கிறது. ஆக, குயவன்தான் **நிமித்த காரணம்.**

ஜோதிட சாஸ்திரத்தில் சொன்ன நிமித்தம் வேறு, இந்த நிமித்தம் வேறு. இவைகள் இரண்டையும் போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது.

அணுக்களை உபாதான காரணமாகக் கொண்டு, **ஈஸ்வரன்** என்கிற ஒரு **நிமித்த காரணம்,** இந்த பிரபஞ்சத்தைப் படைத்திருக்கின்றது என்பதை கூறுவது, **நியாயம்** மற்றும் **வைசேஷிகம்** என்பதின் மதக் கொள்கை ஆகும்.

அதாவது, மண்ணைப் பானையாக்குவதற்குக் குயவன் அவசியம் இருந்தாக வேண்டும். அவன் இல்லாவிட்டால், மண்ணிலே செய்யப்பட்ட பானை இல்லை.

இல்லாத பானை என்ற விளைவை, மண்ணிலிருந்து அந்த குயவன்தான் உண்டாக்குகிறான் என்று கூறுவார்கள். இதற்கு, **ஆரம்பவாதம்** என்றும், **அஸத்-கார்ய-வாதம்** என்று பெயர்.

'**ஸத்**' என்றால் இருப்பது. '**அஸத்**' என்றால், இல்லாதது.

வெறும் மண்ணிலே பானை இல்லை. இல்லாத பானை அதிலிருந்து விளைந்தது. இப்படித்தான், ஈஸ்வரன் அணுக்களைக் கொண்டே, அணுக்களில் இல்லாத இந்த பிரபஞ்ச சிருஷ்டியை உண்டாக்கி இருக்கிறான் என்கிறார்கள். இது **நியாயம்** என்ற மதத்தைத் தழுவிய அவர்களது கொள்கை.

அதுப்போலவே, ஸாங்கியம் என்ற மதத்தினர்களுக்குக் **கடவுள்** என்பது கிடையாது என்பதினால், அவர்கள் **பிரகிருதி** என்ற இயற்கையே இந்த பிரபஞ்சமாக பரிணமித்ததுள்ளது என்பார்கள்.

இது, இந்தக் காலத்து நாஸ்திகர்கள் கூறுவதுப் போன்று "**கடவுள் இல்லை**" என்று பகுத்தறிவைப்பற்றித் தெரியாத பகுத்தறிவு வாதிகளின் கருத்தாக நினைத்து விடக்கூடாது.

ஏனென்றால், உருவமற்ற, அருவமாகிய நிர்குண பிரம்மத்தின் ஸ்தானத்தில் இருக்கப்பட்ட சுத்த ஞான ஸ்வரூபமான '**புருஷன்**' என்பவனை ஸாங்கியர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அவர்கள் உருவமற்ற, அருவமாக உள்ள **புருஷனை** ஏற்றுக் கொள்கிறார்கள். அதேசமயம், அவர்கள் **புருஷனே இந்த பிரக்ருதியாக மாறிவிட்டது** என்கின்றார்கள்.

ஆகவே, ஜடமான ப்ரகிருதி இத்தனை ஒழுங்கு நியதியில் இயங்குவதற்கு, பரமனாகிய புருஷனின் ஸாந்நித்தியமே காரணம் என்கிறார்கள்.

ஸாந்நித்தியம்தான் காரணம், புருஷனே நேராக ஈடுபட்டு ஸ்ருஷ்டியைச் செய்யவில்லை என்கிறார்கள். அதாவது,. சூர்ய வெளிச்சத்தில் தானாக பயிர்கள் முளைக்கின்றன. நீர் நிலைகள் வற்றுகிறது, துணிகள் காய்கிறது. அத்தகைய அந்த சூர்யன் என்பவனின் ஸந்நிதி விசேஷத்தாலேயே இவைகள் எல்லாம் நடக்கின்றன.

ஆனால், சூர்யன் என்பவன் ஏதோ திட்டமிட்டு, இங்குள்ள பயிர்களை எல்லாம் முளைக்க வைக்க வேண்டும் என்றும், நீர் நிலைகளை எல்லாம் வற்ற வைக்க வேண்டும் என்றும் வருவதில்லை. அது, அதன் போக்கில் இருக்கின்றது. ஆனால், அதன் சக்தியாகிய **வெப்பம்** அவைகளை, அவ்வாறு மாற்றத்திற்கு உட்படுத்துகின்றது. அவ்வளவே!

இவ்வாறுதான், புருஷன் என்பவன் இந்த படைப்பில் சம்பந்தப்படுவதில்லை. ஆனால், அதே புருஷனின் ஆற்றலாகிய அவனது சக்தி இந்த படைப்பை தன்னிலிருந்து, தானே உண்டாக்கிக் கொள்கின்றது. இங்கே, **நிமித்த காரணம்** என்பதாக, அந்த ஈஸ்வரன் எதையும் உண்டாக்கவில்லை.

அதாவது, அந்த பிரகிருதியே இந்த பிரபஞ்சமாக மாறிவிட்டது என்பது, ஸாங்கியர்கள் கொள்கை ஆகும். இதற்குப் **பரிணாமவாதம்** என்று பெயர்.

நியாயம் என்ற மதத்தை தழுவியவர்கள் கூறுகின்ற **அஸத்-கார்ய-வாதம்** என்பதிற்கு மாறாக, இந்த ஸாங்கியர்கள் **ஸத்-கார்ய-வாதம்** என்பதைக் கொண்டு, நியாயவாதிகளின் கொள்கையை மறுக்கின்றார்கள்.

அதாவது, உபாதான காரணமான மண்ணிலே இல்லாத பானையை, நிமித்த காரணமான குயவன் உண்டாக்கியதுப் போன்று, பிரக்ருதி என்ற பிரபஞ்சத்தை இறைவன்தான் படைத்தான் என்பது, அஸத்–கார்ய–வாதிகள் கூறும் வாதம்.

ஆனால், **ஸத்** கார்யவாதிகளான ஸாங்கியர்கள் மண்ணுக்குள்ளே பானை ஏற்கனவே இருக்கத்தான் செய்தது. அது எவ்வாறெனில், எள்ளுக்குள்ளே எண்ணை இருப்பதுப் போல என்று கூறி, மண்ணில் மறைமுகமாக இருக்கிற பானைதான் பிறகு, காரியத்தால் வெளியிலேயும் பானையாக வருகிறது என்று கூறுகின்றனர்.

மண்ணை உபயோகிப்பதால்தானே பானை என்ற ஒன்று வருகின்றது? அவ்வாறே, எள்ளை உபயோகித்துத் தானே எண்ணெய் எடுக்கப்படுகின்றது என்கின்றனர்.

அதுப்போன்று, பானையிலே இருப்பதனைத்தும் மண்ணின் அணுத் துகள்கள்தான். அந்த அணுக்களின் ரூபத்தை இப்படி ஒன்றாக ஆக்கினால், அது "**பானை**" என்பதாக, இவர்கள் கூறுகின்றார்கள்.

இதையே, பகவான் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்கள் கூற வரும்போது, அந்த "**ஆரம்ப வாதமும் இல்லை. பரிணாமவாதமும் இல்லை**" என இந்த இரண்டையும் மறுத்து விட்டு, இருக்கின்ற ஒரே பிரம்மம்தான் தன்னுடைய மாயா சக்தியால், இத்தனை ஸ்ருஷ்டிகளும் இருப்பதுப் போன்று, வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது என்கின்றார்.

இப்படி, ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட கருத்துக்களைக் கூறும்போது, நம்மைப் போன்ற சாதாரண பாமர மக்களுக்கு, இவைகளைப்பற்றி, ஒன்றுமே புரியாமல், மனதின் குழப்பத்தின் காரணமாக, அவரவர்களுக்குப் பிடித்தப் பாதையை, அவரவர்களாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டு, மனம் போன போக்கிலேயே எல்லோரும் இன்றுவரை பயணித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

இதை சற்று ஆழமாக விசாரித்துப்பார்க்கின்ற விவேகம் உள்ள மனிதன் மட்டுமே, தன்னுடைய அறிவுப் பரிமாணத்தின் உயர்ந்த நிலையாகிய தன் உண்மை சொரூபத்தை உணர்கின்றான். அவனுக்கு மட்டும்தான் மனிதப் பிறவியின் மகத்துவம் புரிந்து, அதன் உட்பொருள் விளங்கும்.

அது, எப்படி என்று ஆராயலாமா?

அதாவது, பரமாத்மா என்ற குயவனுக்கு வேறாக ஒரு மண்ணே இல்லை. அதனால், நியாயம் கூறும், ஆரம்பவாதம் சரியாக வராது. அடுத்து, அந்த பரமாத்மாவே இந்த பிரபஞ்சமாக மாறிவிட்டார் என்று சாங்கியம் கூறுவது எப்படி இருக்கின்றது தெரியுமா?

பால் தயிராகப் பரிணமித்த பிறகு, அங்கு தயிர் மட்டுமே இருக்கின்றதே தவிர, அதனுடைய மூலமாகிய பால் என்பதின் உண்மை சொரூபம் இப்போது இல்லை.

அதுப்போல, பரமாத்மா என்பவர் இந்த பிரபஞ்சமாக மாறிவிட்டார் என்றால், அந்த ப்ரமாத்மா தன் உண்மை சொரூபத்தை இழந்துவிட்டார் என்பதாக ஆகிவிடும். அதாவது, பால் தயிராக மாறிவிட்டதுப் போல, அல்லது எள் எண்ணெயாக மாறிவிட்டதுப் போல, அலல்து மண் பானையாக மாறிவிட்டதுப் போல ஆகிவிடும். ஆகவே, இதுவும் சரியாக இருக்காது என்பது ஸ்ரீ சங்கரரின் வாதம்.

அதாவது, பரமாத்மா என்பவர் இந்த உலகமாக மாறி விட்டார் என்றால், அது மிகப்பெரிய தவறாகப் போய்விடும். அதனால், பரிணாமம் என்பது பகவானுக்கு இல்லை என்பதினால், உண்மையில், தன்னில் தானாக, சுத்த ஞான ஸ்வரூபமாக ஒரு பக்கம் பகவான் இருந்துக் கொண்டே, தன்னுடைய மாயா சக்தியினால், இந்த ஜீவ–ஜகத்துக்களாகத் தோன்றுகிறார் என்பது ஸ்ரீ சங்கரரின் **மாயாவாதம்** ஆகும்.

அதாவது, இதெல்லாம் ஒரே ஸத் வஸ்துவின் தோற்றம் மட்டும்தான், அதனுடைய வேஷம்தான் என்பது, ஸ்ரீசங்கரரின் "**மாயாவாதம்**" ஆகும்.

அதாவது, ஒருவன் ஒரு வேஷம் போட்டுக் கொள்கிறான் என்றால், அப்பொழுது மட்டும் அவன் அவனாக இல்லாமல் போய் விடுகிறானா என்ன?

உதாரணமாக, பணக்கார நடிகன் பிச்சைக்காரனாக வேஷம் போடுவதினால், அவன் என்ன உண்மையிலேயே பிச்சைக்காரனாக மாறிவிட்டானா? அவனித்தில் பணம் இல்லாமல் போய்விட்டதா என்ன?

இல்லை அல்லவா?

அவன் அவனாகவே இருக்கின்றான். ஆனால், அவனது வேஷம் மட்டுமே பார்ப்பதற்கு அப்படி பிச்சைக்காரன் போன்று இருக்கின்றது. இதைத்தான், நாம் நன்கு உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

அதுப்போலத்தான், அந்த பரமனின் வேஷம் இந்த மொத்த பிரபஞ்சம் என்பதினால், இவைகள் அத்தனையும் அவனது வெறும் வேஷம் மட்டுமே. அதாவது, ஒரு மாயாவியின் கண்கட்டு வித்தை போன்றது என்று இதைக் கூறலாம்.

ஆதலால், படைக்கப்பட்ட இவைகளால் பாதிக்கப்படாமல், அந்த ஒன்றேயாகிய ஸத் வஸ்து, தன்னில் தானாய், ஏகமாக

அப்படியே இருந்துக் கொண்டேயிருக்கிறது என்பதை பகவான் ஸ்ரீ சங்கரர் தமது வாதமாக எடுத்துக் கூறுகின்றார்.

அவரது, அந்த மாயா வாதம் என்ற கொள்கைக்கு முரணாக உள்ளவர்கள் அதை, "**விவர்த்த வாதம்**" என்று கூறுகின்றனர். அவர்கள் கூறுவதை, ஆட்சேபிக்காமல், அப்படியே ஏற்றுக்கொண்ட ஸ்ரீ சங்கரரரும், அந்த விவர்த்த வாதத்தை பின்வறுமாறு விளக்குகின்றார்.

ஒரு கயிறானது பாம்பு போலத் தோன்றுவது விவர்த்தம் என்லாம். கயிறு என்ற உபாதான காரணத்தை வேறு ஒரு நிமித்த காரணம் பாம்பாக மாற்றவில்லை. எனவே, இது ஆரம்ப வாதம் இல்லை. அவ்வாறே, கயிறு பாம்பாகப் பரிணமிக்கவும் இல்லை. அதாவது, கயிறு பாம்பாக மாறிவிடவும் இல்லை. அந்தக் கயிறு கயிறாகவேதான் இருக்கிறது. ஆனால் நம்முடைய அறியாமையினால், அது அவ்வாறு பார்ப்பதற்கு பாம்பு போன்றுத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட அறியாமையின் காரணமாகவே, நமக்கு பிரம்மம் இந்த உலகமாகவும், தனித்தனி ஜீவர்களாகவும் பார்ப்பதற்குத் தெரிகின்றது.

ஈஸ்வரன் இந்த உலகத்திற்கு நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் இருப்பதினால், உண்மையில் இந்த உலகமே ஈஸ்வரனாக இருக்கின்றது.

ஆகவேதான், ஈஸ்வரனால் இந்த உலகமே வியாபிக்கப் பட்டுள்ளது என்ற "**ஈசாவாஸ்யம் இதம் சர்வம்**" என்ற வாக்கியத்திலிருந்து, ஈஸ்வரனுடைய உண்மைத் தன்மை அறியப்பட வேண்டும். அதாவது, இந்த உலகத்தை உலகம் என்ற எண்ணத்தினை விடுத்து, அந்த **ஈஸ்வரன்** என்ற எண்ணத்தினை வைக்க வேண்டும் என்பதே மகான்களின் மிக உயரிய நோக்கம் ஆகும்.

அந்த வகையிலே, பகவான் ஸ்ரீசங்கரர் அவர்கள் கூறிய, இந்த உயரிய உண்மைக்குப் போவதற்கு நம்மிடம் உள்ள பிரத்யேக அறிவாகிய ஆறாம் அறிவு என்ற மனம் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான, தவறான புரிதல்கள் கொண்ட (மனம்) புத்தியை விசாரித்து, விவேகத்துடன் அவைகளை நீக்கும்போது மட்டுமே, மனிதன் அடைந்துள்ள மகத்தான பகுத்தறிவின் பலன் முழுமையாகும். அதற்காகக் கிடைத்துள்ள அரிய பிறவிதான் இந்த **மனிதப் பிறவி** ஆகும்.

நம்மிடம் உள்ள புத்தி சக்தியாகிய மனதின் யுத்தியால், உண்மைப்பதார்த்தங்களைத் தெரிந்துக்கொண்டு, அதிலிருந்து வைராக்யம் பெற்று, சுக, துக்கங்கள் இல்லாத வெறுமையான "**சூன்யம்**" என்ற ஸ்தானத்துக்குப் போவதோடு, நியாயம் மற்றும் வைசேஷிகம் என்ற மதங்கள் நிறுத்திக் கொள்கின்றது. காரணம், அவைகள், **இருமைகள்** எனும், த்வைதத்தின் காரணமாக, இதற்குமேல் போக முடியாது.

ஆனால், நம்முடைய பாரதத்தின் பழமையான சனாத தர்மம் மட்டுமே, **அத்வைதம்** எனும், ஒருமையைக் கொண்டு, ஒரே ஸத்தைப் பிடித்து கொண்டு, அதுவே நாம் என்கிற போதுதான், இங்கு, **இருப்பதெல்லாம் இறைவனே!** என்ற நிறைந்த, நிறைவான மோக்ஷம் நமக்குக் கிடைக்கிறது.

அத்தகைய, "**மோக்ஷம்**" என்பது, நாம் இறந்தபிறகு அடையும் வேறு ஒரு சொர்க்க லோகமோ? பிரம்ம லோகமோ கிடையாது. அது, நம்முடைய மனம் அந்த ஒன்றேயாகிய அறிவை (பரமனை) அறிவதில்தான் அடங்கியுள்ளது.

ஓம் தத் ஸத்!

# (மண்ணும் – பானையும்)



ஈஸ்வரனால் இந்த உலகமே வியாபிக்கப்பட்டுள்ளது என்ற **"ஈசாவாஸ்யம் இதம் சர்வம்"** என்ற வாக்கியத்திலிருந்து, ஈஸ்வரனுடைய உண்மைத் தன்மை அறியப்பட வேண்டும். அதாவது, இந்த உலகத்தை உலகம் என்ற எண்ணத்தினை விடுத்து, அந்த **ஈஸ்வரன்** என்ற எண்ணத்தினை வைக்க வேண்டும் என்பதே,மகான்களின் மிக உயரிய நோக்கம் ஆகும்.